**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.450/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | அபர்னா, வயது 22 |
| Father Name/Husband Name | : | வைகுண்டம் |
| Village | : | கூசாலிப்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | இல்லதரசி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of March 2025.

**(எதிரி ஆஜர்.)**

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கூசாலிப்பட்டியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் எங்கள் ஊரைச்சேர்ந்தவர். ஆஜர் எதிரியின் மனைவிக்கும் எனது கொழுந்தன் மகேஷ் என்பவருக்கும் பழக்கம் இருந்தது. கடந்த 27.03.2024 ஆம் தேதி மாலை 05.00 மணியளவில் என்னுடைய குழந்தைக்கு பெரியம்மை போட்டிருந்தால் அதனை பார்க்க மாமியார் பொன்னுத்தாய், எனது கணவரின் உறவினர் கணேஷ் ஆகியோர்கள் வந்ததிருந்தார்கள்.
2. எங்கள் வீட்டிற்கு வெளியே நாங்கள் மூன்று பேரும் நின்று கொண்டிருந்த போது, எதிரி வந்து என்னை பார்த்து தேவிடியா உன் கொழுந்தனை சொல்லிவை இல்லனா நீயும் உன் கணவரும் இந்த ஊரில் வாழ முடியாது என்று சொல்லி என் கையை முறுக்கி என் குறுக்கில் குத்திவிட்டார்.
3. என்னை எதிரி பெரிய கல்லை கொண்டு எறிய வந்தார். அருகில் இருந்தவர்கள் சத்தம் போட்ட உடன் எதிரி சென்றுவிட்டார். எனது கை மற்றும் குறுக்கில் வலி இருந்ததால் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். போலிசார் வந்து விசாரித்தார்கள் நான் நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு கொடுத்தேன்.

4. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

1. புகாரை யார் எழுதினார் என்றால் எனது வழக்கறிஞர் எழுதினார். எங்கு வைத்து எழுதினார் என்றால் கிழக்கு காவல்நிலையத்தில் வைத்து எழுதிவிட்டு வந்து என்னிடம் கொடுத்தார். அவர் எழுதிமுடித்து கையொப்பம் கேட்டார்கள் நீங்கள் செய்து கொடுத்தீர்கள் என்றால் சரிதான்.
2. அதில் என்ன எழுதியிருந்தார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல நான் சொன்னதை எழுதியிருந்தார். உங்கள் கொழுந்தனுக்கும் எதிரியின் மனைவிக்கும் பழக்கம் இருந்த விவரத்தை புகார்மனுவில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான்.
3. அந்த புகார்மனுவில் அருகில் உள்ளவர்களுக்கும் சம்பவம் நடந்த விவரம் தெரியும் என்பதை புகாரில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. பெரிய கல்லால் அடிக்க வந்தார் என்று புகாரில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.
4. எதிரி உங்களை குறுக்கில் அடித்ததாக சொன்ன விவரத்தை மருத்துவரிடம் சொன்னீர்களா என்றால் ஆம். நீங்கள் கொடுத்த புகாருக்கு காவல்நிலையத்தில் சி.எஸ்.ஆர் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த சி.எஸ்.ஆர் ன் அடிப்படையில் தான் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்
5. அந்த சி.எஸ்.ஆர் ல் கொழுந்தன் மகேஷ் என்பவருக்கும் எதிரிக்கும் வாக்குவாதம் என்று தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சி.எஸ்.ஆர் ல் போன் மூலம் தான் எதிரி உங்களை திட்டியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
6. அந்த சி.எஸ்.ஆர் ல் ரோட்டில் வைத்து சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது உடன் யார் யார் இருந்தார்கள் என்றால் என் மாமியார் என் கணவரின் தம்பி மற்றும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வெளியில் நின்றார்கள்.
7. பக்கத்தில் உள்ளவர்கள் யார் யார் என்றால் இந்திரா, அய்யம்மாள், உஷா, பாலமுருகன். அவர்களை போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. நீங்கள் சொன்ன மேற்படி நபர்களுக்கு நடந்த பிரச்சனை பற்றி எல்லா விவரங்களும் தெரியும் என்றால் சரிதான்.
8. நீங்கள் செல்லத்துரை வீட்டில் தான் வாடைகைக்கு இருக்கிறீர்கள் என்றால் சரிதான். உங்கள் வீட்டின் பக்கத்தில் கனிகா என்பவர்

வீடு உள்ளது என்றால் சரிதான். உங்கள் வீட்டின் பக்கத்தில் குமார் என்பவர் வீடு உள்ளது என்றாலும் அவருக்கும் சம்பவம் பற்றி தெரியும் என்றால் அவர் வீடு பின் வாசலில் உள்ளது.

9. சம்பவத்தன்று எதிரியின் மனைவியும் உங்கள் கொழுந்தனும் உங்கள் வீட்டில் வைத்து பேசிக் கொண்டிருந்த போது தான் பிரச்சனை என்றால் அது பற்றி தெரியாது. உங்கள் கொழுந்தன் எதிரி மனைவி பேசிக் கொண்டிருந்த போது எதிரி சத்தம் போட்டு அவரது மனைவியை கூட்டிச் சென்றார் என்றாலும் எதிரி உங்கள் கொழுந்தன் மீது புகார் கொடுத்துவிடுவார் என்ற பயத்தில் நீங்கள் எதிரி மீது பொய் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.
10. உங்கள் கொழுந்தன் மீது இரண்டு வழக்குகள் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் எதிரி உங்கள் வீட்டிற்கு வந்து உங்களை அசிங்கமாக பேசி அடித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.